## அதியுயுர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபை - 2014

அதியுயுர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, தேறிய சொத்திலுள்ள மாற்றங்களின் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 50 ஆம் இலக்க அதியுயுர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபை அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கொல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அதியுயுர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)**

**எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**- நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அதன் பயன்பாட்டிற்கு கிடைத்த போதே தொடங்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், சபையானது கைதவிர்ப்பின் போது முழு ஆண்டிலும் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்த ஆண்டில் எவ்வித பெறுமானத் தேய்வும் செய்யப்படாமல் இருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | |
| i. நிதிப்பிரமாணம் 133(1)(அ) | நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சபையால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ii. நிதிப்பிரமாணம் 228 | உரிய செலவினக் கணக்கின் விபரங்கள் 2014 சனவரி முதல் மே வரையான காலம் தொடர்பில் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| iii. நிதிப்பிரமாணம் 751(1) | பொருளிருப்பு விடயங்கள் தொடர்பில் புறம்பான பொருளிருப்பு புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை |
| iv. நிதிப்பிரமாணம் 751(2) | மின்னியல் பொருளிருப்பு விடயங்கள் தொடர்பில் புறம்பான மின்னியல் பொருத்திகளிற்கான புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| v. நிதிப்பிரமாணம் 756 | சொத்துக்களின் வருடாந்த மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை |
| vi நிதிப்பிரமாணம் 1647(உ) | வாகனங்களிற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் வாகனங்களின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | i. தேவையான அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் 2013 பெப்ரவரியிலிருந்து முகாமையாளர் பராமரிப்பிற்கு ரூபா 2,940 தொகையான நான்கு சம்பள அதிகரிப்புகள் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>ii. சபையின் முகாமையாளர் (பராமரிப்பு) அவருக்கு தகுதியுடைய சம்பளங்களிற்கு மேலதிகமாக 2013 ஏப்ரல் மாதத்திலிருந்து ரூபா 15,000 மாதாந்த படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) அத்தியாயம் 5 இன் 5.2.1 ஆம் பந்தி | (i) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டில் பாதிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) அனுமதிக்கப்பட்ட வருடாந்த பாதீடானது அடுத்துவரும் ஆண்டு தொடங்குவதற்கு முன்னர் 15 நாட்களிற்கு பிந்தாமல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இது 2015 பெப்ரவரி 19 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) அத்தியாயம் 7 இன் 7.2 ஆம் பந்தி | அமைப்பு வரைபடம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அத்காரம் மற்றும் பொறுப்புக்கள் கையளித்தல் அமைப்பு வரைபடத்தின் வரிசையில் பிரதான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கவில்லை |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதியுயர் நீதிமன்ற கட்டிட தொகுதி முகாமைத்துவ சபையின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா

18,382,575 நேரொத்த பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 4,837,746 ஆன மிகையில் விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 23,220,321 ஆன முன்னேற்றத்தைக் காண்பித்தது. ரூபா 3,150,504 ஆன மொத்த செலவினங்களிற்கு எதிராக ரூபா 26,370,825 ஆல் வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1987 இன் 50 ஆம் இலக்க அதியுயர் நீதிமன்ற கட்டிட தொகுதி முகாமைத்துவ சபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கட்டிடத் தொகுதியின் பொது வசதிகளை உயர்த்துவதற்கு அவசியமாக இருக்க வேண்டிய மேலதிகங்கள், திருத்தங்கள் மாறும் முன்னேற்றங்கள் உள்ளடங்கலான உயர்நீதிமன்ற கட்டிடத் தொகுதி மற்றும் கட்டிடங்களின் கட்டுப்பாடு, நிர்வாகம், முகாமை மற்றும் பராமரிப்பு என்பன முகாமைத்துவ சபை நோக்கங்களாக உள்ளன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 124 மில்லியன் மொத்த செலவில் ரூபா 9 மில்லியன் அல்லது 7 சதவீதம் மாத்திரமே முகாமைத்துவ சபையின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு செலவழிக்கப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முகாமைத்துவ சபையால் உடமையாக்கப்பட்ட ஆறு கட்டிடங்கள் மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட மதிப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் 2003 ஆம் ஆண்டிலிருந்து வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. 10 ஆண்டுகளிற்கு மேலாக கடந்திருந்த போதிலும், தற்போதைய மதிப்பீடுடன் பொருத்துவதற்கும் வாடகையை மீள்மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உரிய திகதியில் மின்சாரப் பட்டியல் செலுத்த தவறியமையால் ரூபா 346,571 ஆன தொகை தண்டப்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டிணைந்த திட்டமானது முன்று ஆண்டுகளிற்கு குறையாமல் வினைத்திறனுள்ள சுழற்சி திட்டமாக இருக்க வேண்டிய போதிலும் 2012 முதல் 2016 வரையான காலத்திற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் தற்போதைய போக்குகளின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது தாபிக்கப்பட்டிருக்காததுடன் முகாமைத்துவ சபை நீதித்துறை அமைச்சால் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழவின் கூட்டங்களில் பங்குபற்றியிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் சபையின் மார்ஷலன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
(ஆ) வாகனங்கள் பாவனை